பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை 08.11.2024 கதிர் 001



## பொய்க்குற்றச்சாட்டு வைத்தவர்கள் மீது மருத்துவர் ஷாபி முறையீடு

### பாதுகாப்பு அமைச்சில் நேற்று தாக்கல்

குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியநிபுணர்ஷாபிசிஹாப்தீன் 2019ஆம் ☞8

## மக்கள் வழங்கும் ஆணைதான் தமிழ் அரசின் எழுச்சிக்கு வித்து

### வேட்பாளர் சிறீதரன் தெரிவிப்பு

2024நாடாளுமன்றப்பொதுத்தேர்தலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கப்போகும் ஆணைதான், எமது மக்கள் விரும்பும் வகையிலான கட்சியின் மீளெழுச்சிக்கு வித்திடும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் ☞8

## சந்தேகநபராக ரணிலையும் பெயரிட நீதிமன்றம் அனுமதி

கடவுச் சீட்டுக் கொள்வனவு வழக்கில் ரணிலை சந்தேகநபராகப் பெயரிட மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ☞8

## இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவுக்குள் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நடந்த கழுத்தறுப்புக்கள்குழிபறிப்புக்களால்உட்கட்சி மோதல் தீவிரமடைந்திருக்கிறது என்று இந்தப் பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டிவந்திருக்கின்றேன். அது கொதிநிலையை எட்டியிருக்கின்றது என்றும் ஓரிருநாள்களின் முன்னரும் தெரிவித்திருந்தேன். இப்போது அது பகிரங்கமாக வெடித்துச் சிதறி இருக்கின்றது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கல நாதனையும் அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சுரேன் குருசாமியையும் வெளுத்து வாங்கிவிட்டார். குற்றவழக்குப் பின்னணி உள்ள ஒருவரை யாழ். மாவட்ட வேட்பாளராக்கியுள்ளதாக செல்வத்தின் மீது அவர் ☞2

# இந்திய இழுவைமடிப் படகுகளின் கைதை அதிகரிக்க ஆலோசனை

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

இலங்கைக்கடல்எல்லைக்குள்அத்துமீறி நுழைந்து கடல்வளங்களைப் பாதிக்கின்ற இந்தியக் கடற்றொழில் இழுவைமடிப் படகுகளை உடனடியாக அதிகளவில் கைது செய்யும்படி ஆலோசனையை நாம் வழங்கியுள்ளோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் எழுப்பபட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் எந்தவொரு நாட்டிலும் கடல் எல்லை மீறப்படலாம். நாமும் கடல் எல்லையை மீறுகின்றோம். அவர்களும் கடல் எல்லையை மீறலாம். அதுசாதாரண விடயம். ஆனால் இங்கு காணப்படுவது கடல் எல்லையை மீறுவது மட்டுமல்ல. இழுவைப் படகுகள் கடல் வளத்தினை ☞2

## வட்ஸ்அப் ஊடான மோசடிகள் தொடர்பாக அரசு எச்சரிக்கை

வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களின் ஊடாக இடம்பெறும் நிதி மோசடி தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவை மேற்கோள்காட்டி அரச தகவல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாகவட்ஸ்அப்கணக்குகள் ☞8

## சுமந்திரனிடம் இழப்பீடு கேட்டு அங்கஜனின் அப்பா 'நோட்டீஸ்'


ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரனிடம் 50 கோடி ரூபா நட்டஈடு கேட்டு, அங்கஜன் இராமநாதனின் தந்தையான சதாசிவம் இராமநாதன் தனது சட்டத்தரணி ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.

செப்டெம்பர் 30ஆம் திகதி மன்னாரில் நடந்த ஊடக சந்திப்பொன்றில், 'அங்கஜன் இராமநாதனின் தந்தையாரின் பெயரிலும் ஒரு மதுபானசாலைக்கான கடிதம் வழங்கப்பட்டமைக்கான அத்தாட்சி கடிதம் ☞8

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!




சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை

## ரெலோ தலைவர் செல்வம் உடன் பதவி விலகவேண்டும்

### கட்சியின் நிர்வாகச் செயலர் விந்தன் பகிரங்கப் போர்க்கொடி

ரெலோ அமைப்பின் தலைவரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உடனடியாக தலைமை பொறுப்பில் இருந்து விலக வேண்டும் என ரெலோவின்நிர்வாகசெயலாளரும் வடமாகாணசபையின்முன்னாள் உறுப்பினருமான விந்தன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச்சந்தித் ☞2

## தேர்தல் அறிக்கையினை வெளியிட்டது முன்னணி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் அறிக்கை நேற்று கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் வைத்து வெளியிடப்பட்டது. நிகழ்வில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் செயலாளர் கஜேந்திரன், பேச்சாளர் சுகாஸ் உள்ளிட்டவேட்பாளர்களும்கலந்து கொண்டனர். தேர்தல்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசின் புதிய அரசமைப்புப் பேரவையினால் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கான தீர்வு ☞8

## விட்டுக்கொடுக்காத சமஷ்டியை வலியுறுத்துவது முன்னணியே

### வேட்பாளர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

தற்போது ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் தேசிய மக்கள் சக்திவிரும்புகின்றஏக்கியராஜ்ஜிய அரசமைப்பைநிறைவேற்றுவதற்கு ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்கனவே இணங்கி விட்டார்கள். நாங்கள் மட்டும்தான் அந்த நிலைப்பாட்டில் இருந்து விலகி விட்டுக்கொடுக்காதமுழுமையான சமஷ்டியைவலியுறுத்துகின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தலைவரும்,அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பகிரங்கமாகவே குற்றம் சுமத்தினார்.

தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரம் மட்டுமே இருக்கும் நிலையில் ரெலோவுக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பகிரங்க வெடிப்பு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வாக்குகளைப் பெரிதும் பாதிக்கும். தனது கட்சிக்குள் ஒற்றுமையைப் பேண முடியாத ரெலோதான் கூட்டமைப்பின் ஒற்றுமை பற்றியும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளின் ஒற்றுமை பற்றியும் வாய் கிழியப் பேசும். தனது கட்சிக்குள் உள்ளவர்களுக்கே குழிபறித்துக்கொண்டேதான் தமிழ் அரசுக் கட்சியின் உட்கட்சி மோதலைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் என்பதெல்லாம் வேடிக்கை விநோதம்தான்.

விந்தன் கடந்த இரண்டு நாள்களாகவே ஊடகங்களில் பகிரங்கமாக ரெலோ தலைமைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டார். புலம்பெயர் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலும் அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருந்தார். விந்தன் போர்க்கொடி-தூக்குவதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. யாழ். மாவட்டத்தில் ரெலோ சார்பான வேட்பாளராக விந்தனைக் களமிறக்கவேண்டும் என்பதுதான் கட்சியின் தலைமைக்குழுவால் திருகோணமலையில் எடுக்கப்பட்ட தீர்மானம்.

கட்சிஉறுப்பினர்களின்பெரும்கரவொலிக்கு மத்தியில் தன்னை வேட்பாளராகத் தெரிவு செய்யும் முடிவு அறிவிக்கப்பட்டது என்று கூறும் விந்தன், ஆனால் பின்னர் கட்சித் தலைவர் செல்வம், செயலாளர் ஜனா மற்றும் பெருளாளர் சுரேன் ஆகியோர் சேர்ந்து சதி செய்து தன்னை வேட்பாளராகாமல் செய்துவிட்டனர்என்றும்தமிழ்அரசுக்கட்சியில் இருந்து தாவிய சசிகலாவுக்கு ரெலோவின் வேட்பாளர் இடத்தை வழங்கிவிட்டனர் என்றும் குற்றஞ்சாட்டுகின்றார்.

44 வருடங்களாக ரெலோவில் உறுப்பினராக இருக்கும் தனக்கே சிறீ ரெலோவில் இருந்து நேற்று வந்தவர்களால் இந்த நிலை என்றால் கட்சியின் நிலமை என்ன என்பதைப் புரிந்துகொள்ளும்படி அவர் மக்களைக் கேட்கிறார். விந்தனின் கோபமும் அங்கலாய்ப்பும் நியாயமானது. யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் ஓரளவுக்கு ரெலோவுக்கு மக்களாதரவைத் திரட்டி வைத்திருக்கும் நபர் விந்தன். யாழ். நகரப் பகுதிக்குள்ளும் தீவகத்திலும் விந்தனுக்கு ஒரு வாக்கு வங்கி இருக்கின்றது. சுரேன் கடந்த பொதுத்தேர்தலிலும்போட்டியிட்டுத்தோற்றவர். அப்படியிருந்தும் அவருக்கு தேர்தலில் போட்டியிட மீண்டும் வாய்ப்பு வழங்கிய ரெலோ தலைவரும் செயலாளரும், மாகாண சபையில்வெற்றிபெற்றவிந்தனுக்குவேட்பாளர் வாய்ப்புத் தர கட்சியின் தலைமைக்குழு முடிவையும் மீறி மறுத்துவிட்டனர்.

அதுமட்டும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுக்கு, உடைவுக்குக் காரணமில்லை. ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு காரணம். ஒருபுறத்தில் தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பில் இருந்துகொண்டு அதன் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டே பின்கதவால் ரணிலோ-டும் கள்ள உறவு வைத்துக்கொண்டதன் காரணமாக செல்வத்துக்குக் கிடைத்த 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அவர் 8 கோடி ரூபாயை சுரேனுக்கு மட்டும் கொடுத்து கட்சியின் மற்றெந்த மாவட்டத் தலைமைகளுக்கும் பிரிக்காது விட்டதும்தான் தற்போதைய குளறுபடிகளுக்குக் காரணம்.

இதனால்செல்வம்பதவிவிலகவேண்டும் என்று விந்தன் வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் அது நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. பதவி மோகத்தில் ஊறித் திளைத்தவர்களானசெல்வமும்மற்றவர்களும் அவ்வளவுஇலகுவில்அதனைவிட்டுக்கொடுக்க மாட்டார்கள். தமது தலைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் தண்ட பேதங்களை நன்கு பயன்படுத்தத் தெரிந்தவர்கள். எனவே விந்தன் உட்பட கட்சிக்குள் போர்க்கொடி தூக்குபவர்களின் தலைகளுக்குத்தான் உண்மையான ஆபத்து. ரெலோ தலைமைக் குழுவிற்குள் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களுக்கும் தமது தலைமையின் இரட்டைவேடம், போலி தமிழ்த் தேசிய வேடம், பின்வாசல் தொடர்புகள், கள்ள உறவுகள் எல்லாம் தெரியும். என்றாலும் பண பலமும் அதிகாரப் பலமும் அற்ற அவர்களுக்கு தலைமையை எதிர்த்து கலகக்காரர்களுடன் சேரும் துணிவு இல்லை என்பதால் இவர்களின் கைகளே ஓங்கியிருக்கிறது. விந்தனையும் கலகக்காரர்களையுமாவது கட்சிக்குள் அவர்களால் பாதுகாக்க முடிகிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுமுழுதாகஅளிக்கும்செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றன. எனவே அத்துமீறி கடல்வளங்களை பாதிக்கின்ற இழுவைப் படகுகளை உடனடியாக அதிகளவில் கைது செய்யுமாறு ஆலோசனையை நாம் வழங்கியுள்ளோம்.

தற்போது வரையில் 84 இந்திய கடற்றொழிலாளர்கள் சிறைகளில் உள்ளனர். நாம் இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமையை கைவிடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று அவர்கள் எமக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார்கள். புதிதாக இழுவைமடிப் படகுகளை தயாரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

வருகை தரும் படகுகளைக் கட்டுப்படுத்துவதாகவும் அவர்கள் உறுதி அளித்துள்ளனர். எமது கடல் வளத்தினை நாம் பாதுகாக்கவேண்டும். எமது கடல் வளத்தினை எமது கடற்றொழிலாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்ற சூழலிலேயே உள்ளோம்.

விசேடமாக ஒருவிடயத்தினைக் கூறுகின்றேன். வடக்கின் சொத்துக்களை வடக்கு மக்களுக்கு பாதுகாத்துக் கொடுப்பதற்கு முடியாது போனால் ஆளும்தரப்பு தமது சொத்துக்களையும், வளங்களையும் பாதுகாப்பதில்லை என்ற நிலைப்பாடு வடபகுதி மக்கள் மத்தியில் உருவாகும்.

தமக்காக ஆளும்தரப்புச் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் வடக்கு மக்களுக்கு ஏற்படுகின்றது என்றால் அவர்களுக்கான எமது ஆளும்தரப்பு நடவடிக்கைகளை எடுத்தே ஆகவேண்டும். அவர்களுக்காகவும் ஆளும்தரப்புஅர்ப்பணிப்புடன்செயற்படுகின்றது என்பதை நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது என்றார்.

## ரெலோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியத்திற்கு விரோதமான செயல்களைசெய்யும்,கொழும்பில்குற்றவியல் வழக்குகளைக் கொண்டிருக்கும் ஒருவர் யாழ் . தேர்தல் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிடுகின்றார். அதனை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

அவர்தொடர்பானவழக்குஆவணங்களை வெளியிட நான் தயார். எனக்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எடுத்தால் ,அத்தனை ஆவணங்களையும்கையளிப்பேன். அவரை கட்சிக்குள் கொண்டு வந்து , வேட்பாளர் ஆக்கியவர் செல்வம் அடைக்கலநாதன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுக்கட்டமைப்பாக சங்கு சின்னத்திற்கு வாக்களிக் வேண்டும் என அனைவரும் வேலை செய்தபோது, வன்னி தேர்தல் மாவட்டத்தில் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்குமாறு செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டோர் வேலை செய்யவில்லை.

அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பெரும் தொகை பணத்தினை பெற்று, சங்கு சின்னத்திற்கு வேலை செய்யாது இருந்தனர். ரெலோவில் இருந்த பலர் விலகி சென்றுள்ளனர். யாழ்ப்பாணத்தில் சிறிகாந்தா , சிவாஜிலிங்கம் போன்றோரும் , வன்னியில் உதயராசா உள்ளிட்டோரும். இதற்கெல்லாம் காரணம் ரெலோவின் தலைவரான செல்வம் அடைக்கலநாதனே. எனவே அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்றார்.

## விட்டுக்கொடுக்காத. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சமஷ்டி ஆட்சியை பற்றி பேசுவதற்கோ நடைமுறைப்படுத்துவதற்தோ ஒருபோதும் இடமில்லை என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அதேபோல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தபோவதில்லை என்ற தொனியிலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு பின்னர் வடக்கு கிழக்கில் தெரிவுசெய்யப்படக்கூடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறுதிப்பெரும்பான்மை சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு கிடைக்காவிட்டால் அநுர குமார திசாநாயக்க சொல்லும் வகையில் எந்த சிக்கலும் இல்லாமல் ஒற்றையாட்சி அரசமைப்பை தமிழ் மக்களின் ஆதரவோடு நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் அங்கே ஏற்படும். அதைத்தான் தேசிய மக்கள் சக்தி துணிந்து எதிர்பார்க்கிறது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ஆளும் அதிகாரத் தரப்பினால் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல்

## டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

ஆளும்தரப்பால் ஊடகங்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆளும்தரப்பால் ஊடகங்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாட்டின் முதற்பிரஜையான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முதன் முதலாகஊடகங்களுக்குஅச்சுறுத்தல்விடுத்தார். ஊடகங்கள் புதிய ஆடை அணிய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டது ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும்.

அது மாத்திரமின்றி துறைக்கு பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத், ஊடகங்கள் கட்டுப்பாடற்றசுதந்திரத்தைஅனுபவிப்பதாகவும் அதனை குறைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இது நாம் தினந்தோறும் கேட்ட ஒன்றாகும். ஆட்சிக்கு வர முன்னர் தேர்தல் மேடைகளில் ஆற்றிய உரையின் போது, நாம் வந்த பின்னர் சில ஊடக நிறுவனங்களை மூட வேண்டியேற்படும் என்றுகூடத் தெரிவித்தனர்.

தற்போது அந்த அபாயம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் கலைக்கப்படவேண்டும் என்கின்றனர். எதிர்க்கட்சிகூடத்தேவையில்லை என்கின்றனர்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்தை அடக்குவதற்கு ஆளும்தரப்பு முனைகின்றது. தேர்தலுக்கு முன் ஊடக சுதந்திரத்துக்காக குரல் கொடுப்பதாகக் கூறியவர்கள் தற்போது அவற்றை அச்சுறுத்துவது ஒழுக்கமானதல்ல.

இந்த ஆளும்தரப்பிடமிருந்து நாம் இவற்றை எதிர்பார்க்கவில்லை. ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் அதிகளவில் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டவர் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆவார். ஆனால் அவர் ஒருபோதும் அவற்றின் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்க வேண்டும் என்றோ அல்லது அவற்றின் மீது அச்சுறுத்தல் விடுக்கவோ இல்லை.

ஊடகங்களுக்கு எதிரான நிலைப்பாடுகளுடன்இந்தஆளும்தரப்பால்முன்னோக்கிப்பயனிக்க முடியாது. ஊடக சுதந்திரம் அற்ற நாட்டில் ஜனநாயகம் உள்ளிட்ட எதையும் எதிர்பார்க்க வேண்டாம். இது நாட்டின் அழிவுக்கான ஆரம்பமாகக் கூட இருக்கலாம் என்றார்.

# மின்சாரக் கட்டண குறைப்பில் மக்களை ஏமாற்றுகிறது அரசு

## முன்னாள் அமைச்சர் காஞ்சன குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு மின்சார கட்டணத்தை குறைப்பதாகமக்களைஏமாற்றிவருகிறதுஎன்று புதிய ஜனநாயக முன்னணியின் மாத்தறை மாவட்ட வேட்பாளரும் எரிசக்தி மற்றும் புதுப்பிக்க சக்தி முன்னாள் அமைச்சருமான காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பில்அமைந்துள்ளபுதியஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஒக்டோபர் மாதத்தில் இருந்து மின்சார கட்டணத்தை குறைப்பதாக ஆளும்தரப்புத் தெரிவித்து வந்தது. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மின்சாரக் கட்டணம் குறைப்புக்கு அனுமதி வழங்க வேண்டியது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவாகும். ஆனால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் காலம் முடிவடைந்தும்இன்னும்ஆணைக்குழுவுக்கு தலைவர் மற்றும் ஆணையாளர்கள் நியமிக்கப்படவில்லை. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நியமிக்கப்படாமல் எவ்வாறு மின்சார கட்டணம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என கேட்கிறோம்.

ஆளும்தரப்பு மின்சார கட்டணத்தை குறைப்பதாக மக்களை ஏமாற்றி வருகிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை தந்தால்மின்சாரகட்டணத்தில்மூன்றில்ஒன்றை குறைப்பதற்குநடவடிக்கைஎடுப்பதாகஜனாதிபதி அநுரகுமார தெரிவித்திருந்தார். ஒக்டோபர் மாதத்தில் குறைப்பதாக தெரிவித்தார்கள். நவம்பர் மாதமாகியும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை.

மின்சார சபையின் சட்டத்தின் பிரகாரம், டிசெம்பர் மாதத்திலும் ஆளும்தரப்பினர் மின்சாரக் கட்டணத்தை குறைக்கப் போவதில்லை. மின்சார கட்டணம் குறைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கலாம். ஆனால் அதற்குபொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுவே அனுமதி வழங்க வேண்டி இருக்கிறது.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, இந்த வருடம் அதுதொடர்பான சட்டமூலம்நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தற்போது அந்தச் சட்டமே அமுலில் இருக்கிறது. ஆனால் மின்சார சபையில் செயலாளர் மற்றும் பொது முகாமையாளர் சட்டத்தை மீறி செயற்பட்டு வருகிறார். தேர்தலுக்கு பின்னர் இவர்கள் இருவருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

நாடாளுமன்றத்தில் சட்டம் அனுமதிக்கப் பட்டால் அது மீண்டும் மாற்றப்படும்வரை நாட்டின் சட்டமாகும். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என யாருக்கும் தெரிக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு மீண்டும் அந்த சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முடியும். அதுவரை அந்த சட்டம் அமுலில் இருக்கும்.

அதேவேளை, இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபையை கூட்டி நாங்கள் ஒரு தீர்மானம் எடுத்திருந்தோம். அதாவது பணிப்பாளர் சபையில் இருக்கும் ஒருவர்பொதுமுகாமையாளர்மற்றும்மேலதிக பொதுமுகாமையாளர் பதவிக்கு நியமிக்க அவர் ஓய்வு பெறுவதற்கு குறைந்தது 2 வருடங்களாவது இருக்க வேண்டும் என்று.

ஓய்வு பெறுவதற்கு குறுகிய காலம் இருக்கும்போது இந்த பதவிகளுக்கு நியமிக்கும்போதுஅவர்கள்ஓய்வுபெறும்போது பெற்றுக்கொண்ட சம்பளமே ஓய்வூதியமாக வழங்கப்பட வேண்டும். அதனால் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருப்பதற்கு இந்த நடவடிக்கை எடுத்திருந்தோம். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கட்சியில் இருக்கும்போது அரச நிதி துஷ்பிரயோம் தொடர்பில் கதைத்து வந்தாலும் தற்போது இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருப்பவர் அடுத்த மாதம் ஓய்வு பெற இருக்கிறார். இரண்டு மாதங்களில் பொது முகாமையாளர் ஒருவரால் எதுவும் செய்ய முடியாது. ஆளும் தரப்புத் தெரிவிப்பதை மாத்திரமே செய்வார் என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

# பனை அபிவிருத்திச்சபை தலைவர் தெரிவில் அநுரகுமார அரசு கோட்டை விட்டுவிட்டது

## மக்கள் ஏமாறவேண்டாம் என்கிறார் வேட்பாளர் பிரகாஷ்



ஊழலை ஒழிப்போம், ஊழல்வாதிகளை சட்டத்தின்முன் நிறுத்துவோம், எமது ஆட்சியில் ஊழல்வாதிகளுக்கு இடமில்லை என்றுவீரமுழக்கம்செய்துஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அநுர குமார திஸநாயக்க, நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களை ஏமாற்றி வாக்குப் பெற எண்ணுகின்றார். அதற்குத்தமிழ்மக்கள்பலிக்கடாவாகக் கூடாது. தேசியமக்கள் சக்திக்கு வாக்களித்துவிட்டு, பின் குத்துது குடையுதென்றுகூறுவதில்பயனில்லை.

- இவ்வாறு காட்டத்துடன் தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்நாடாளுமன்றவேட்பாளரும், வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள்தவிசாளருமாகியதி.பிரகாஷ்.

சங்குவேலி, மானிப்பாயில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அநுர அரசின் உண்மை முகம், அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று 2 மாதத்துக்குள்ளேயே தெள;ளத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹண விஜய வீரவின் மகனே, தேசிய மக்கள் சக்திக்கு ஒருபோதும் மூன்றில் இரண்டு வீத பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கிடைக்கக்கூடாது. கிடைத்தால் நாடு தாங்காது என்று எச்சரித்திருக்கின்றார்.

நாங்கள் தமிழர்கள். எமது பிரச்சினை தொடர்பில் சிந்திப்போம். எமக்கு ஊழலைஒழிப்பது, நேர்மையான ஆட்சி போன்ற விடயங்கள் இரண்டாம் பட்சமே. அது சிங்கள மக்களுக்குத் தேவையான ஒன்று. நாங்;கள் - தமிழர்கள் - இந்த நாட்டில் 2 ஆம் தரப் பிரஜைகள் என்ற நிலை முதலில் மாறவேண்டும். எமது இனம் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றிற்காக ஆயிரமாயிரம் இளைஞர்கள் இந்த மண்ணில் காவுகொள்ளப்பட்டார்கள். அவர்கள் எதற்காக ஆயுதம் தூக்கிப் போராடினார்கள். ஊழலற்ற ஆட்சி வேண்டும் என்றா? இல்லை. இங்கு அரசியல் ஞானம் அறவே அற்ற சிலர், தென்னிலங்கை மாயைக்குள் அகப்பட்டு, மாற்றம் வேண்டும், மாற்றம் வேண்டும் என்று மக்களைத் தவறான வழியில் திசைதிருப்புகின்றார்கள்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்போது அமைச்சர் விஜித ஹேரத், சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். சிங்களவர் விரும்புகின்ற ஒரு நாட்டுக்குள்ளே உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான - ஆகக்குறைந்தபட்சத் தீர்வான - சமஷ்யைக்கூட பேச்சுக்கே இடமில்லை என்று பகிரங்கமாக அறிவிக்கின்ற இந்த அரசை நம்பித் தமிழ் மக்கள் எவ்வாறு பின்செல்வது? தமிழ்மக்களுக்கு அவ்வாறு பகிரங்கமாகவே அறிவித்துவிட்டு, இங்குள்ள சிலரைப் பிடித்து எமது மக்களின் வாங்குகளைப் பெறுவதற்காக தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளார்கள். அவர்களும் தமிழர்கள் அமைச்சராகலாம் என்ற பசப்புவார்த்தை கூறி எமது மக்களை ஏமாற்றி தமது பதவிகளுக்காக வாக்குக் கேட்கிறார்கள்.

ராஜபக்ஷாக்கள் கம்பெனி செய்ததைத்தான் இவர்கள் செய்கிறார்கள். உள்ளடக்கம் ஒன்றுதான். உருவம்தான் வேறு. ராஜபக்ஷாக்கள் அமைச்சில் டக்ளஸிற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கினார்கள். மஹிந்த ஆட்சிக் காலத்தில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அமைச்சராகவும் கோட்டா காலத்தில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சராகவும் இருந்தார். சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலும் அமைச்சராகக் கடமையாற்றியுள்ளார்.

சரி, பிழைகளுக்கு அப்பால், டக்ளஸ் எமது இனவிடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஒரு போராளி. அவர் தேர்தல்களில் தனது தமிழ் கட்சியிலேயே போட்டியிட்டார். ஆனால், இவர்கள் அவ்வாறானவர்கள் அல்லர். சிங்களக் கட்;சிக்கு வாக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகப் போட்டியிடுகின்றனர். அந்த அணியில் ஒரு வைத்தியரும் கூட கேட்கிறார். அவர் எமது மக்களை முட்டாள்கள் என்று எண்ணி தனக்கு சுகார அமைச்சுக் கிடைக்கும் என்றுகூறி தான் மனப்பால் குடித்து, எமது மக்களையும் முட்டாள்கள் ஆக்கிறார்.

அமைச்சுப் பதவிக்காகவா எமது இனம் செங்குருதியில் தோய்ந்தது. இவர்களுடன் ஒப்பிடும் போது டக்ளஸ் மேலானவர். அவர் தனது கட்சியில் - பின்னர் தடம்மாறிச் சென்றிருந்தாலும் இனவிடுதலைக்காக ஆயுதம் ஏந்தி எமது மக்களுக்காகப் போராடிய ஒரு கட்சியில் தேர்தலில் நின்றார். அமைச்சுப் பதவி பேரம்பேசி பெற்றார். அவர் முன்பு ஒரு விடயத்தை அடிக்கடி கூறுவார். நாடாளுமன்றத்தில் அரச தீர்மாணங்களுக்கு ஆதரவாகக் கை உயர்த்தினால்தான், நாம் ஆளும்தரப்பிடம் கைநீட்டி அபிவிருத்திகளைப் பெறலாம்;. - என்றார். ஆனால், இங்கு எதுவும் பேசாமல் ஆளும் கட்சியில் இருக்கின்றோம் என்ற ஒரு காரணத்துக்காக கை உயர்த்தவிருக்கின்றவர்களை - சிங்களக்கட்;சிக்கு - நீங்கள் வாக்களிப்பீர்களாயின் அது டக்ளஸ்'க்கு வாக்களிப்பதிலும் விட இழிநிலையானது.

அடுத்து பனை அபிவிருத்திச் சபை தலைவர் விடயத்தை பாருங்கள். ஆட்சிக்கு வந்தவுடன் செல்வின் என்ற நேர்மையானவரை நியமித்தார்கள். பின் திடுதிப்பென அவரை மாற்றி ஊழல் போர்வழி என்று சமூகத்தால் அறியப்பட்ட விநாயகமூர்த்தி சகாதேவன் என்பவரை நியமித்திருக்கின்றார்கள். இன்று யாழில் பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்காக கைதடியில் வீதிக்கு இறங்கியுள்ளார்கள்.

அரசின் இந்த செயற்பாடு வடக்கிற்கு ஊழல் ஒழிப்பும் இல்லை என்பதையே காட்டுகிறது. மாற்றம் தெற்குக்கு தான் வடக்கிற்கு இல்லை என்பது இதிலிருந்து புலனாகின்றது.

ஆகவே, தமிழ் மக்கள் போலிகளைக் கண்டு ஏமாறக்கூடாது. தென்னிலங்கை மக்கள் கோட்டாவை விரட்டியடித்தபோது, அவரைக் கொண்டுவந்ததில் எமக்குப் பங்கில்லாதமையால் நாம் வேடிக்கை பார்த்தோம். அநுர அரசுக்கு நாம் வாக்களித்து பங்காளியாகினோம் என்றால் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாக வடக்கு தமிழர்களின் வீடுகளை எரிக்கும் நிலையும் ஒருகாலத்தில் ஏற்படலாம். நாம் வழமை போன்று வேடிக்கை பார்க்கவேண்டும் என்றால் நாம் சரியாக எமது இனம் சார்ந்து செயற்படுகின்ற தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்தால் நாம் சரியாகத்தான் தெரிவுசெய்தோம் என்று இரத்தக்கொதிப்பு ஏற்படாமல் புத்திசாதுர்யமாக நடந்தார்கள் தமிழர்கள் என்ற கர்வத்துடன் வேடிக்கை பார்க்கலாம். நான் இதை ஏன் தெரிவிக்கிறேன் என்றால், அநுரகுமார அரசு தமக்கு தொழிற்சங்கங்களைப் பாவித்துவிட்டு, தற்போது அனைத்தையும் கலைப்பதாக முடிவு செய்துள்ளது. அவர்கள் ஏதோ தவறிழைக்க உள்ளார்கள் என்பது இதிலிருந்து புலனாகின்றது. - என்றார். (05)

# பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் போராட்டம்

## அநுர அரசுக்கு எதிராகவும் கோசங்கள்



யாழ். கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் சபை முன்றிலில் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சபைக்கு நியமிக்கப்பட்ட புதிய தலைவர் ஊழியர்களுடன் நடந்து கொள்ளும் அநாகரிகமான செயற்பாடுகளை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, தேசிய மக்கள் சக்தி அரசே, தகுதயற்ற புதிய தலைவர் நியமனத்தை உடனடியாக இரத்துச் செய், பனை தறித்த காசுதான் ஊழியர்களின் ஊதியமா?, நிர்வாகதிறன் அற்ற பதில் பொதுமுகாமையாளரை உடனடியாக பதிவி நீக்கம் செய், தேசிய மக்கள் சக்தி அரசே செல்வினின் பதவி நீக்கத்திற்கு தகுந்த காரணம் கூறு, அண்ணன் பதில் முகாமையாளர் ஊழலை மறைக்க தங்கை உள்ளக கணக்காய்வாளர், பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் தண்டச்சோறுகளா?, ஊழலற்ற அரசின் தலைவர் நியமனம் இதுவா? என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை கைகளில் ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதிவியேற்ற பின்னர் பனை அபிவிருத்தி சபையின் தலைவராகசெல்வின்நியமிக்கப்பட்டார்.





அவர் தனது கடமைகளை பெறுப்பேற்று சில தினங் களின் அவர் மாற்றப்பட்டு புதிய தலைவராக விநாயகமூர்த்தி சகாதேவன் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐந்து வாரமா ஆண்டா என்பது முக்கியமில்லை

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கை ஐந்து வாரங்ளிற்கானது இல்லை ஐந்து வருடங்களிற்கானது, அப்படியிருக்கும்போது ஐந்து வாரங்களுக்கு தமது ஆளும்தரப்பு எதையும் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுவது நியாயமற்றது என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆளும்தரப்பு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என சில அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய அவர், ஆளும் தரப்பு தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற ஐந்து ஆண்டுகள் இருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

”ஐந்து வருடகாலத்தில் பூர்த்தி செய்வதற்காகவே தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையைச் சமர்ப்பித்தது. சஜித்பிரேமதாச போன்ற சில அரசியல்வாதிகள் வேண்டுகோள் விடுப்பது போல ஐந்து வாரங்களிற்குள் அவற்றை நிறைவேற்ற முடியாது.

நாங்கள் மேலும் தீர்மானங்களை எடுக்க வேண்டும், ஐந்து வருடங்களிற்குள் நிறைவேற்றுவதற்கு தீர்மானித்த விடயங்களை ஐந்து வருடங்களிற்குள் பூர்த்திசெய்ய முடியாது, நாங்கள் இன்னமும் ஒழுங்கான ஆளும்தரப்பைக்கூட அமைக்கவில்லை, கடந்த ஐந்து வாரங்களில் மிக முக்கியமான தீர்மானங்களை மாத்திரம் எடுத்தோம்.

100க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் இருந்து பிரச்சினைகளிற்கு தீர்வை காணத்தவறிய சூழ்நிலையில் மூன்று அமைச்சர்கள் நாட்டை நிர்வகிக்கின்றனர் என குறிப்பிட்டுள்ள அவர் நாங்கள் புதிய பாதையில் பயணிக்கின்றோம் என்பதை காண்பித்துள்ளோம், நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படுவதற்கு ஊழல் அரசியல் கலாசாரம் இலஞ்சம் போன்றவையே காரணம்” என்றார்.

ஒரு வகையில் அவர் சொல்வது நியாயம்தான். அதற்காக அது மட்டுமே நியாயம் அல்ல. விலைவாசிக் குறைப்பு, வரிக் குறைப்பு, பொருளதார நலன்களின் மீட்சி என்பவற்றுக்கு மக்கள் 5 ஆண்டுகள் காத்திருக்கவேண்டும் என்றால் அவர்கள் தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கவேண்டிய அவசியமே இல்லை. ஏற்கனவே மாறி மாறி ஆட்சி செய்து வந்தவர்கள் தமக்கு உடனடியாக நிவாரணம் தரமாட்டார்கள் என்பதாலும்தான் அவர்கள் இடதுசாரிப் பாரம்பரியத்தைத் தழுவி நிற்கும் ஒரு தரப்பை அதிகாரத்தில் அமர்த்தினார்கள். அதற்கான பயனை மக்கள் உடனடியாக எதிர்பார்ப்பதில் தவறில்லை.

அதுபோக, அமைச்சர் விஜித ஹேரத் சொல்வதைப் போன்று முக்கிய விடயங்களைக்கூட உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும் அவற்றைச் செய்வதற்கான நடவடிக்கைகளையாவது எடுக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்யப்பட்டதற்கான அறிகுறிகளைக் காண முடியவில்லை. குறிப்பாக உணவுகளின் விலைகள் குறைவதற்குப் பதிலாக உயரத் தொடங்கியுள்ளன. பெருமளவு மூளைசாலிகளின் வெளியேற்றத்துக்குக் காரணமான வரிக் குறைப்புக்கான எந்த அறிகுறியையும் காணவில்லை. இவற்றுக்காகவும் மக்கள் 5 வருடங்கள் காத்திருக்கவேண்டும் என்று கேட்பதில் எந்த நியாயமும் இல்லை.

தேசிய மக்கள் சக்தி தனது வாக்குறுதிகளில் சிலவற்றையாவது நிறைவேற்றுவதற்கான உடனடிச் செயற்பாடுகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு, ஐந்து வாரம், ஐந்து மாதம், ஐந்து ஆண்டுகள் என்கிற விளக்கம் அல்ல.



## சீனாவுக்கு வந்த சோதனை

வெங்கடேஸ்வரன்

ஒரு காலத்தில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை மிகவும் தீவிரமாகக் கடைப்பிடித்த நாடு சீனா. முக்கியமாக ஒரு குடும்பத்துக்கு ஒரே குழந்தை என்ற கொள்கையைக் கடுமையாக நடைமுறைப்படுத்தியது. இரண்டாவது குழந்தை பெற்றுக்கொண்டால் அபாரதம் விதித்தல், சட்டத்தை மீறியதாக நடவடிக்கை எடுத்தல் என சீன கம்யூனிஸ அரசு தனது அதிகாரத்தை கடுமையாகப் பயன்படுத்தியது.

அரசு உத்தரவை மீறி செயல்படுவது என்பது சீனாவில் எளிதில் நினைத்துப் பார்க்க முடியாத விஷயம். அதிக குழந்தைகள் பெற்றால் விதிகளின்படி உள்ள அபராதம் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை எதிர்கொண்டே ஆக வேண்டும்.

சுமார் 30 ஆண்டுகளாகத் தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்ட மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் திட்டம் சீன அரசு எதிர்பார்த்த முடிவைக் கொடுத்தது. குழந்தைகள் பெற்றுக் கொள்வது குறைந்ததால் மக்கள்தொகை அதிகரிக்கும் வேகம் குறைந்தது. கடந்த 2023 ஏப்ரலில் உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு என்ற பெருமையை இந்தியாவிடம் சீனா பறிகொடுத்தது.

ஒரு நாட்டின் வறுமை உள்பட பல்வேறு சமூக பொருளாதாரப் பிரச்னைகளுக்கு மக்கள்தொகை பெருக்கம் என்பது முக்கியக் காரணம் என்பதை மறுக்க முடியாது. அதேநேரத்தில் மக்கள்தொகை பெருக்கத்தை தீவிரமாகக் கட்டுப்படுத்துவதும் ஒரு கட்டத்தில் சமூக பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை சீனா மூலம் உலகம் உணர்ந்து கொண்டது.

இப்போது சீனாவின் மக்கள் தொகையான சுமார் 140 கோடியில் 60 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கை 30 கோடிக்கு மேல் உள்ளது. 2035-ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 40 கோடியாகவும், 2050-ஆம் ஆண்டு 50 கோடியாகவும் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 65 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கை 14 சதவீதமாகும்.

ஒருபுறம் முதியோர் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கிறது. குழந்தை பிறப்பைக் குறைத்ததால் வரும் ஆண்டுகளில் இளைஞர்கள் எண்ணிக்கை வேகமாக குறையும். வேலைக்குச் சென்று உழைக்கும் வயதில் இருப்போர் எண்ணிக்கை குறைவது பல்வேறு பொருளாதார பாதிப்புகளை உருவாக்கும். பல வேலைகளுக்கு உரிய நபர்கள் கிடைக்காத நிலையும் ஏற்படும். இதனால் வேளாண்மை, உற்பத்தி தொழில் என அனைத்துத் துறைகளும் பாதிக்கப்படும். இது ஒட்டுமொத்த நாட்டையும் பின்னோக்கி இழுத்துச் செல்லும்.

சீனா முழுவதுமே பல சிறார் பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. தொடக்கப் பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை குறைந்து வருகிறது. அதே நேரத்தில் முதியோர் இல்லங்களின் தேவை அதிகரித்து வருகிறது. பல தனியார் பள்ளிகள் முதியோர் இல்லங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஆசிரியராக இருந்த பலருக்கு முதியோர் பராமரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு அங்கேயே பணிவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் பிரசவத்துக்கு வரும் தாய்மார்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் பிரசவ வார்டுகள் வேறு சிகிச்சைக்கான பிரிவுகளாக மாற்றப்படுகின்றன. புதிதாகக் கட்டப்படும் மருத்துவமனைகளில் பிரசவப் பிரிவே இருப்பதில்லை.

இந்த பாதிப்புகளை முன்பே கணித்து வைத்திருந்த சீன அரசு, 2016-ஆம் ஆண்டு ‘ஒரு குடும்பம் ஒரு குழந்தை’ கொள்கையை தளர்த்தியது. ஆனால், அரசு எதிர்பார்த்த அளவுக்கு இரண்டாவது குழந்தையைப் பெற்றுக்கொள்ள பெரும்பாலான மக்கள் முன்வரவில்லை. பெற்றோருக்கு ஒரே பிள்ளையாக இருந்து பழக்கப்பட்டுவிட்டவர்கள், ஒரே குழந்தைக்கு மட்டுமே பெற்றோராக இருக்க முடிவு செய்தனர்!

இதையடுத்து, குழந்தை பெற்றுக்கொள்ளும் திட்டத்தை மறுஆய்வு செய்த சீன அரசு, ‘மூன்று குழந்தைகள் வரை பெற்றுக் கொள்ளலாம்’ என்று 2021-இல் அறிவித்தது. இதிலும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. புதிய தலைமுறையை அதிகம் உருவாக்கும் அரசின் முயற்சிக்கு தோல்வியே கிடைத்தது. அதிக பிள்ளைகள் இருக்கும் குடும்பத்துக்கு குழந்தைகள் உதவித் தொகை, கூடுதல் குழந்தைகள் பெற்றுக் கொள்பவர்களுக்கு வரிச் சலுகை போன்றவை அறிவிக்கப்பட்டன. இதுவும் எதிர்பார்த்த பயனைத் தருவதாகத் தெரியவில்லை.

மறுபுறம் ஓய்வு பெறும் வயதை எட்டுவோர் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. அதே நேரத்தில் வெற்றிடமாகும் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்போர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. வேறு வழியில்லாமல் அரசுப் பணி உள்பட பல்வேறு பணிகளில் ஆண்களுக்கான ஓய்வுபெறும் வயதை 60-இலிருந்து 63-ஆக உயர்த்தியது. பெண்களுக்கான ஓய்வு பெறும் வயது 55 இ-லிருந்து 58-ஆக மாற்றப்பட்டது. இதுவும் அடுத்த சில ஆண்டுகளுக்கே பயன் கொடுக்கும் என்று தெரிகிறது.

தனது இலக்கை அடைய எதையும் செய்யும் சீன கம்யூனிஸ அரசு, அடுத்த கட்டமாக அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் வரி விதிப்பு என்பது தொடங்கி அரசே வாடகைத் தாய் முறை அமல்படுத்தி குழந்தைப் பேற்றை அரசுப் பணியாக மாற்றினாலும்கூட வியப்பில்லை!

பல்வேறு வளர்ந்த, வளரும் நாடுகளில் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்தே வருகிறது. பிரிட்டன், ஜப்பான், இத்தாலி, தென்கொரியா உள்ளிட்ட பல நாடுகள் முதியோர் எண்ணிக்கை மிகுந்த நாடுகளாக மாறி வருகின்றன. பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் மக்கள்தொகையை அதிகரிக்க அரசு சார்பில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

2050-ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் ஆப்பிரிக்க கண்டத்தைச் சேர்ந்த 8 நாடுகளே உலகின் மக்கள்தொகை வளர்ச்சியில் 50 சதவீத இடத்தைப் பிடிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மக்கள்தொகை பெருக்கத்தைப் போன்றே மக்கள்தொகை குறைவதும் நாட்டை வெகுவாகப் பாதிக்கும் விஷயம். பிறப்பு-இறப்பு விகிதத்தை சரியாகப் பராமரிப்பது இப்போது பல நாடுகளுக்கு சவாலான பிரச்சினையாக உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிற்சங்கங்களை நீக்கப்போவதாக அரச தரப்பின் கூற்றுக்கு ஏன் மௌனம்?

## சுசில் பிரேமஜயந்த அவற்றிடம் கேள்வி



அரச ஊழியர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுவந்த சம்பள முரண்பாடு மற்றும் சம்பள அதிகரிப்புக்கு தீர்வுகாணவே உதயசெனவிரத்னகுழு நியமிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களுக்கும் இதுதொடர்பில் தெளிவுபடுத்தி, அவர்களின் இணக்கப்பாட்டையும் பெற்றிருந்தோம்.

ஆனால் தற்போது தொழிற்சங்கங்களை நீக்கப்போவதாக அரசாங்க தரப்பில் தெரிவித்துவருவது தொடர்பில் தொழிற்சங்கங்கள் மௌனமாக இருப்பதன் மூலம் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா எனக் கேட்கிறோம் என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்த நாட்டை அதில் இருந்து மீட்பதற்கு பாரிய முயற்சிகளை எடுத்துவரும் சந்தர்ப்பத்தில் கல்வி, சுகாதாரம், புகையிரத தொழிற்சங்கங்கள் அடிக்கடி தொழிற்சங்க போராட்டங்களை மேற்கொண்டு வந்தன.

அரச ஊழியர்களின் சம்பள பிரச்சினை மற்றும் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகாண வேண்டும் என்றே அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் கோரிக்கைக்கு அமையவே அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளவும் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காணவும் உதய செனவிரத்ன குழு நியமிக்கப்பட்டது.

செனவிரத்ன குழுவின் பரிந்துரைக்கமைய அடிப்படை சம்பளத்தில் நூற்றுக்கு 24 வீத சம்பள அதிகரிப்புக்கு பரிந்துரை செய்திருந்தது.

அதேபோன்று வாழ்க்கைச்செலவு கொடுப்பனவை 17 ஆயிரத்து 800ரூபாவில் இருந்து 25ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கு தேவையான வருமானத்தை வாகன இறக்குமதி மூலம் கிடைக்கப்பெறும் தீர்வை வரி மூலம் பெறவும் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்கு தொழிற்சங்கங்களும் இணக்கம் தெரிவித்திருந்தன.

ஆனால் தற்போது தொழிற்சங்கங்கள் தேவைப்படாது எனவும் தொழிற்சங்கங்களை நீக்குவதாகவும் அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் தெரிவித்து வருகின்றன.

தொழிற்சங்கங்களும் இது தொடர்பில் மௌனமாகவே இருந்துவருகின்றன. அப்படியானால் தொழிற்சங்கங்களின் நீண்டகால கோரிக்கைகளுக்கு தீர்வுகிடைக்கப்பெற்றுள்ளதா என நாங்கள் கேட்கிறோம்.

அதேபோன்று உழைக்கும்போது செலுத்தும் வரியை குறைப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அவ்வாறு அந்த வரியை குறைக்கும்போது அரசாங்கத்தின் வருமானம் குறைகிறது.

அந்த வருமானத்துக்கான வழி என்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். அத்துடன் பொருள்களுக்கான வற் வரியை குறைப்பதாகவும் தெரிவித்தார்கள்.

அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கும் பிரதான வழியே இந்த வரிகள். சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டின் பிரகாரம் வரிகளை குறைக்கும்போது குறையும் வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வழியை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்கு அமைய 2028ஆம் ஆண்டு நாங்கள் மீண்டும் கடன் செலுத்துவதற்கு முடியுமான வகையில் எமது பொருளாதார அபிவிருத்தி அடைய வேண்டும்.

தற்போதைய வருமானத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு ஒரு வீதத்துக்கும் அதிகம் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு இருக்கும்போது வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? அதேபோன்று தற்போது கிடைக்கும் வருமானம் குறையும் வகையில் அரசாங்கம் வரி குறைப்புகளை மேற்கொண்டால் அந்த வருமானத்தை எவ்வாறு ஈட்டிக்கொள்வது என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

அதனால் அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். அதேநேரம் அதற்கான வருமானத்துக்கும் வழியை அமைக்க வேண்டும். இல்லாவிட்டால் நெருக்கடி நிலையே ஏற்படும். - என்றார்.(05)

# அதிகளவு அரிசி பீர் உற்பத்திக்கு வழங்கப்படுவதாலே தட்டுப்பாடு!

## சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கம் வேதனை

பீர் உற்பத்திக்காக அதிகளவு அரிசி வழங்கப்படுவதால் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நேரடிப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

யு.கேவின் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் சங்கத்தின் தலைவர் பீர் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கச்சா அரிசி நெல் அறுவடை மூலம் உற்பத்திசெய்யப்படுவதாக சேமசிங்க சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் கருத்து தெரிவித்த யு.கே.சேமசிங்க -

'பீர் தயாரிக்க கச்சா அரிசி தேவை. ஆனால் பீர் தயாரிக்க தேவையான கச்சா அரிசி நெல் அரிசியில் இருந்து பெறப்படுகிறது. எனவே, பீர் உற்பத்திக்கு அதிக சதவீதத்தை இயக்கும்போது, நெல் அரிசி உற்பத்திக்கு தேவையான நெல் பற்றாக்குறை உள்ளது. '

அரிசி விலையை கட்டுப்படுத்த அரசு உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது வரை கட்டுப்பாட்டு விலையில் அரிசி கிடைக்கவில்லை என கடைக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த சில வாரங்களாக இலங்கை சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து அரிசி தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நிலைமையை கருத்திற்கொண்ட ஜனாதிபதி, பாரிய அரிசி வியாபாரிகளை அழைத்து கலந்துரையாடினார். அங்கு சில்லறை சந்தையில் அரிசியின் கட்டுப்பாட்டு விலையை பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. - என்றார்.(05)

# கண்டியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நபரொருவர் உயிரிழப்பு!

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பிட்டிய மீகனுவ வீதியில் முச்சக்கரவண்டிக்கு அருகில் வீழ்ந்து கிடந்த நபர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் புதன்கிழமை விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கண்டி வீதியில் மின்கம்பமொன்றுக்கு அருகில் ஓட்டோ ஒன்று நிறுத்தப்பட்டிருந்த நிலையில் அதன் சாரதி என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் ஓட்டோக்கு அருகில் விழுந்து கிடந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வெரெல்லகம பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும் , உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (05)

# இரத்மலானையில் சிவப்பு நிறமாக மாறிய கால்வாய்

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிக்கை



இரத்மலானையில் கால்வாய் ஒன்றுசிவப்பு நிறமாக மாறியதற்கான காரணம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இரத்மலானை, படோவிட்ட பிரதேசத்தில் உள்ள கால்வாய் ஒன்று செவ்வாய்க்கிழமை காலை முதல் சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது.

இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில், பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு செவ்வாய்க்கிழமை கிடைத்த தகவலின் பிரகாரம் அன்றைய தினம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மேல்மாகாண அலுவலகம் கள ஆய்வு மேற்கொண்டுள்ளது.

இந்தக் கள விசாரணையில், கால்வாயில் சிவப்பு நிற சாயம் கலந்த கழிவுநீர் விடப்பட்டுள்ளதால் தண்ணீர் நிறம் மாறியிருப்பது தெரியவந்துள்ளது.

இந்த நிறமி நீரில் கரையக்கூடிய நிறமி என்றும், மதிப்புகள் மற்றும் அளவுருக்கள் தற்போதுள்ள சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப இருப்பதாகவும், அதிக மதிப்புகளைக் காட்டாது என்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# அம்மாச்சி உணவகத்தில் உணவு கையாள்பவர்களிற்கு விழிப்புணர்வு

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்தில் உணவு கையாள்பவர்களிற்கான விசேட விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது.



இதில் உணவு கையாள்பவர்கள் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள், தனிநபர் சுகாதார நடைமுறைகள், உணவகத்தில் பேணப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழங்கப்பட்டன.

எதிர்காலத்தில் வழங்கப்பட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் அறிவுறுத்தப்பட்டது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# எரிபொருள் விலை சூத்திரத்தை அரசு வெளிப்படுத்தவேண்டும்

## கஞ்சன ஆளும்தரப்பிடம் கோரிக்கை

எரிபொருள்விலைதீர்மானிப்பதுதொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் அண்மையில் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. கடந்த இரண்டு மாதங்களில் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொண்ட விலை சூத்திரத்தை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்எனபுதியஜனநாயகமுன்னணியின் மாத்தறைமாவட்டவேட்பாளரும்எரிசக்திமற்றும் புதுப்பிக்க சக்தி முன்னாள் அமைச்சருமான காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பில்அமைந்துள்ளபுதியஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில்வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளதால் எரிபொருள் தொடர்பில் விலை தீர்மானிப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன என கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடக சந்திப்பொன்றின்போது தெரிவித்தார். தலைவரின் இந்த கூற்று கடந்த அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். இந்த கூற்று முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

இலங்கைபெற்றோலியகூட்டுத்தாபனத்தின் விலை தீர்மானிக்கப்படுவது, ஏனைய நிறுவனங்களின் இலாம், உற்பத்தி செலவின் அடிப்படையில் அல்ல. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சுயாதீன நிறுவனமாகவே செயற்பட்டு வருகிறது. கடந்த 18 மாதங்களாக எவ்வாறு செயற்பட்டதோ அவ்வாறு ஒப்பந்தங்களின்அடிப்படையில்செயற்படுவதே இவர்களின் கடமை.

கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர்கள் எரிபொருள் விலை தீர்மானிப்பது தொடர்பில் நாட்டுக்கு பிழையான கருத்தை தெரிவித்து, வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தத்துக்கு செல்வற்கு முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது. அதனால் நாட்டுக்கு ஒரு விடயத்தைதெரிவிக்கும்போதுஒப்பந்தங்களை சரியானமுறையில்வாசித்துபார்க்கவேண்டும். அதுதொடர்பான புரிதல் இல்லை என்றால் எமக்கு தெளிவுபடுத்த முடியும்.

இந்த துறையில் போதுமான அனுபவம்



இல்லாமையே இவ்வாறான தவறான கருத்துக்களை இவர்கள் தெரிவித்து வருகின்றனர். விலை தொடர்பில் பல்வேறு நிறுவனங்கள் கோரிக்கை விடுக்கலாம். ஆனால் அதனை ஏற்றுக்கொள்வதா நிராகரிப்பதா என தீர்மானிக்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது. அதனால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஒருபோதும் வேறு நிறுவனங்களின் இலாப நட்டத்தின் அடிப்படையில் விலை நிர்ணயித்ததில்லை.

அத்துடன்கடந்த18மாதங்களாகஎரிபொருள் விலை சூத்திரத்திற்கமையவே விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் விலை சூத்திரத்தையும் வெளிப்படுத்தி இருந்தேன்.அல்லது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தேன்.

ஆனால் கடந்த இரண்டு மாதங்களில் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோதும் அது விலை சூத்திரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிக்கிறார். ஆனால் விலை சூத்திரத்தின் பிரகாரமே விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவிக்கிறார். இருந்தாலும் விலை சூத்திரத்தை அரசாங்கம் மறைத்துள்ளது. அதனால் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொண்ட விலை சூத்திரத்தை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

அத்துடன்மக்கள்விடுதலைமுன்னணியின் தொழிற்சங்க தலைவராக இருந்தமைக்காக, குறைந்த அனுபவம் உள்ள ஒருவரை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு தலைவராக நியமித்துள்ளதன் மூலம் நிதி முகாமைத்துவத்தின் பலமான நிலையில் இருக்கும் இந்த நிறுவனம் வீழ்ச்சியடைய நீண்ட காலம் செல்லாது. - என்றார்.(05)

# மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐ.நா. அமைதிகாக்கும் பணிக்காக புறப்படவுள்ள இலங்கை விமானப்படை



மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்காக புறப்படவுள்ள இலங்கை விமானப்படை உறுப்பினர்களின் வெளியேற்று அணிவகுப்பு கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் இடம்பெற்றது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐ.நா. அமைதிகாக்கும்பணிகளுக்காகசெல்லவுள்ள இலங்கை விமானப்படை உறுப்பினர்களின் அணிவகுப்பு விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தலைமையில் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் பெருமிதத்துடன் நடைபெற்றது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்காக புறப்படவுள்ள இலங்கை விமானப்படையின் 10 ஆவது குழுவில் 20 அதிகாரிகளும் 88 படைவீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இலங்கை விமானப்படை அமைதி காக்கும் கடமைகளில் ஈடுபட்டதன் மூலம் சுமார் 130 மில்லியன் அமெரிக்க டொலர்களை திறைசேரிக்கு வழங்கியுள்ளது.

ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கை விமானப்படை உறுப்பினர்கள், மத்திய ஆபிரிக்க குடியரசில் போர் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பதோடு, துருப்பு போக்குவரத்து, விஜபி போக்குவரத்து, உணவு மற்றும் சரக்கு போக்குவரத்து, உள் விமானங்கள், பாராசூட் தரையிறக்கம், மருத்துவ போக்குவரத்துக்கு ஆகியவற்றுக்கு ஆதரவு வழங்கிவருகிறது.(05)

# கனிய மணல் அகழ்வை எதிர்த்து மன்னாரில் தொடர்ந்து போராட்டம்

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பொது மக்களாலும் பொது அமைப்புகளாலும் கனியமணல்அகழ்வுக்குஎதிர்ப்புதெரிவிக்கப் பட்டு வருகின்ற நிலையில் புதன்கிழமை காலை தலைமன்னார் பிரதான வீதி எருக்கலம் பிட்டி பகுதியில் கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து குழு ஒன்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் தேர்தல் கண்காணிப்பு குழுவிற்கு கிடைக்க பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய அப்பகுதி விஜயம் மேற்கொண்ட குழுவினர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான போராட்டங்கள் மேற்கொள்ள முடியாது என்பதால் இப்பகுதியில் இருந்து கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தியிருந்தது.

இருப்பினும் அவர்கள் அகன்று செல்லாததுடன் தேர்தல் உத்தியோகஸ்த்தர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அரச சேவைக்கும் தேர்தல் கடமைக்குஇடையூறுஏற்படுத்தும்வகையில் செயற்பட்டால்கைதுசெய்யப்பட்டுநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அப்பகுதியில் இருந்து கலைந்து சென்றனர்.

இந்த நிலையில் குறித்த போராட்டத்தில் கலந்துகொள்ளஅழைத்துவரப்பட்டவர்களுக்கு வெளிநாட்டை சேர்ந்த நிறுவனம் ஒன்று நபருக்கு 3000 ரூபா வழங்கி போராட்டத்துக்குஅழைத்துவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(05)

# தேவாலயத்தில் புதையல் தோண்டிய 13 பேர் கைது

தொம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடமாபிட்டிகம பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் புதையல் தோண்டியதாகக்கூறப்படும்13சந்தேகநபர்கள் செவ்வாய்க்கிழமைகைதுசெய்யப்பட்டுள்ளனர் என தொம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

தொம்பே பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹெய்யன்துடுவ, சியம்பலாப்பே, தெல்கொட, மல்வானை, இம்புல்கொட, தொம்பே, கேகாலை, ஹோமாகம, கடுவலை, கிரிந்திவெல மற்றும் ஹங்வெல்ல ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 22 முதல் 58 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள், கார், வான் மற்றும் 02 ஓட்டோ என்பனபொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தொம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தொடருந்தில் ஒளிப்படம் எடுக்கமுயன்ற அமெரிக்கப் பெண் விபத்தில் காயம்



கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் பயணித்த அமெரிக்க பெண் ஒருவர் ரயில் சுரங்கப்பாதையில் மோதி காயமடைந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வந்த அமெரிக்க பெண்ணொருவரே காயமடைந்துள்ளார்.

இவர் ரயிலில் பயணிக்கும் போது புகைப்படம் எடுக்க முயன்றுள்ள நிலையில் ரயில் சுரங்கப்பாதையில் மோதி காயமடைந்துள்ளார் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் சிகிச்சைக்காக தியத்தலாவை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# லொறி – மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் சாவு

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எம்புல்கம - பனாகொடை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பனாகொடையிலிருந்து எம்புல்கம நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியின் இடது பக்கமாகத் திரும்ப முயன்ற போது மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளானது வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞனும் படுகாயமடைந்துள்ள நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஆவார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்லபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# அரசியல் தீர்வைநோக்கிய பயணத்துடன் அபிவிருத்தியே தமிழ் அரசு கட்சி இலக்கு

## அதன் செயலர் வைத்தியர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

அரசியல் தீர்வைநோக்கிய பயணத்துடன் அபிவிருத்தியே எனது இலக்கு என முன்னாள் மாகாண அமைச்சரும் தமிழரசு கட்சி பொதுசெயலாளருமானவைத்தியர்சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது -

நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக சாத்தியமான வழிமுறைகளைப் பின்பற்றி புதிய அரசாங்கத்துடன் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதுடன் சமாந்திரமாக போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க பாடுபடுவேன்.

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் கிராமமொன்றிற்கு தேர்தல் பரப்புரைக்காக சென்றிருந்தேன். அங்கு முன்னாள் போராளி ஒருவர் என்னிடம் சங்கடமான கேள்வி ஒன்றைக்கேட்டார்.

நீங்கள் வெற்றிபெற்றால் தேசியத்துடன் இணைந்து பயணிப்பீர்களா அல்லது மத்திய அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பீர்களா என்று. நான் அவருக்கு பதில்கூறினேன்,

இரண்டுடனும் இணைந்துபயணிப்பேன் என்று, தேசியம் என்பது எமது அரசியல் உரிமை அதனை பெறுவதற்காக தொடர்ந்தும் பாடுபடுவேன்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைப் பதற்கும், பிரதேசத்தின் அபிவிருத்தியைச் செய்வதற்கும் மத்திய அரசின் துறைசார்ந்த அமைச்சுக்களுடனும், சர்வதேச நிதிநிறுவனங்களுடனும், புலம்பெயர் அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றுவேன்.

தமிழ்மக்களின்அரசியல்அபிலாசைகளை தீர்த்துவைப்பதற்காக இதயசுத்தியுடன் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சு நடத்துவதற்கு எமது கட்சி என்றுமே தயாராக உள்ளது.

அமையவுள்ள புதிய அரசாங்கத்தின் அணுகுமுறையில் மாற்றமொன்று ஏற்பட்டால் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினையை தீர்த்துவைப்பது இலகுவான விடயமாகும்.

எனினும் அவர்களின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். தேர்தல் காலத்தில் மாறுபட்ட கருத்துக்களை அவர்கள் தெரிவித்துவருகின்றனர்.

ஆனாலும்அரசியல்தீர்வுகிடைக்கும்வரை பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை பிரச்சனைகளை புறந்தள்ளிவிடமுடியாது. அவற்றினை தீர்ப்பதற்காக மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவது தவிர்க்கமுடியாததாகும்.

கடந்த காலங்களில் மாகாண அமைச்சராக நான் இருந்தபோது மத்திய அரசின் துறைசார் அமைச்சர்களுடன்பேசிவடக்கு மாகாணத்தில் பாரிய சுகாதார அபிவிருத்தி திட்டங்களை கொண்டுவருவதற்கு முடிந்தது.

எமது மாகாணத்தின் தேவைகள் ஏனைய மாகாணங்களை விட வேறுபட்டதாகும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

யுத்தத்தினால் காயமடைந்து சுயமாக நடமாடமுடியாதவர்களுக்கு விசேட வைத்திய அலகு முல்லைத்தீவு மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று வடக்கு மாகாணத்தில் பல விசேட வைத்திய சிகிச்சை அலகுகளை அமைக்கமுடிந்தது, மக்களின் விடிவுக்காய் தம்மை அர்ப்பணித்தவர்கள் கவனிக்கப்படாதுள்ளனர்.

அவர்களுக்கான விசேட திட்டங்களை செயற்படுத்தவேண்டும். நிரந்தர அரசியல்தீர்வு கிடைக்கும்வரை மக்களின் பிரச்சனைகளை தீர்த்துவைக்காது வெறும் உசுப்பேத்தும் பேச்சுக்களை பேசிக்கொண்டிருப்பதால் பலனேதும் கிடைக்கப்போவதில்லை. - என்றார்.(05)

# பாடசாலை மாணவர்களைத் தாக்கி சித்திரவதைசெய்த 3 சிப்பாய் கைது

இரு பாடசாலை மாணவர்களை தாக்கி சித்திரவதை செய்ததாக கூறப்படும் மூன்று இராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை பல்லேபொல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் இரு மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் ஒருவரது சகோதரனுக்கும் தாக்குதலுக்குள்ளான மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# அநுரவின் தலைமைத்துவத்தில் பொருளாதாரம் புத்துயிர்பெறும்

## சீனத் தூதுவர் நம்பிக்கை



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வலுவான தலைமையின் கீழ், இலங்கை அரசாங்கமும் மக்களும் நிச்சயமாக தன்னம்பிக்கையுடன், பல்வேறு இடர்களையும் சவால்களையும் கடந்து, சிரமங்களிலிருந்து விரைவாக மீண்டு, பொருளாதாரத்தை புத்துயிர் பெற முடியும் என கீ சென்ஹொங் தெரிவித்தார்.

'சீன தூதுவர் புலமைப்பரிசில்' பரிசளிப்பு விழா கெப்பிட்டிபொல பாடசாலையில் நடைபெற்றது.

அங்கு விஜயம் செய்த சீனத்தூதுவர் கீ சென்ஹொங் முதலில், சீன மற்றும் சிங்கள மொழிகளில் பொறிக்கப்பட்ட 'காலனித்துவம் மற்றும் படையெடுப்பிற்கு எதிராகவும் சுதந்திரத்திற்காகவும் தைரியமாக போராடிய மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய தூதுவர் குறிப்பிடுகையில் - மாணவர்களின் அன்பான வரவேற்பு சீன மற்றும் இலங்கை மக்களுக்குஇடையிலானசகோதரத்துவத்தை மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டுகிறது.

சீனாவும்இலங்கையும்வெகுதொலைவில் உள்ளன, ஆனால் எங்கள் நட்பு பரிமாற்றம் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்துக்கொண்டிருக்கிறது.



சர்வதேச நிலைமைகள் எவ்வாறு மாறினாலும், சீனா எப்போதும் இலங்கை மக்களுடன்நிற்கும். அத்துடன் இலங்கையின் நம்பகமான நண்பராகவும் நல்ல பங்காளியாகவும்உள்ளது. இலங்கைதற்போது புதிய சகாப்தத்தில் பிரவேசித்துள்ளதுடன், சீன அரசாங்கமும் மக்களும் தங்களால் இயன்ற வகையில் இலங்கைக்கு பல்வேறு வகையான உதவிகளை தொடர்ந்தும் வழங்குவார்கள்.

ஜனாதிபதி திஸாநாயக்கவின் வலுவான தலைமையின் கீழ், வீர உணர்வை முன்னெடுத்துச் செல்வதன் மூலம், இலங்கை அரசாங்கமும் மக்களும் நிச்சயமாக தன்னம்பிக்கையுடன், பல்வேறு இடர்களையும் சவால்களையும் கடந்து, சிரமங்களிலிருந்து விரைவாக மீண்டு, பொருளாதாரத்தை புத்துயிர் பெற முடியும். - என்றார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜி.எம்.ஆர்.டி.அபோன்ஸ் குறிப்பிடுகையில் -

இலங்கை செழிப்பு மற்றும் வலிமை அடைவதற்கு சீன அரசாங்கமும் மக்களும் தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவுக்கும் உதவிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாடசாலையின் பழைய மாணவர் என்ற வகையில், சீனத் தூதரகம் வழங்கிய நன்கொடைக்கு மனமார்ந்த நன்றிகள். இச்செயற்பாடு இலங்கை - சீன நட்புறவை தொடர்ந்து ஆழப்படுத்துவதற்கு பங்களிக்கின்றது. - என்றார்.(05)



# பிரதமரின் மருத்துவப் பிரிவு மீண்டும் பொதுச் சேவைக்குத் திருப்பப்பட்டது





பிரதமர்அலுவலகத்தில்ஸ்தாபிக்கப்பட்டிருந்த வைத்திய பிரிவினை கலைத்து அதில் சேவை செய்த வைத்திய அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் உட்பட அங்கிருந்த சுகாதார உபகரணங்கள், ஔடதங்கள், இரண்டு அம்புலன்ஸ்கள் என்பவற்றை மீண்டும் சுகாதார அமைச்சிற்கு பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரி தலைமையில் செவ்வாய்க்கிழமை முற்பகல்பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரியால்சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபாலவிடம் அதற்கான ஆவணங்கள் மற்றும் திறப்புகள் இதன்போது கையளிக்கப்பட்டன.

அத்தியாவசியமற்றசெலவுகளை குறைப்பதற்கு அரசு எடுத் துள்ள கொள்கை ரீதியிலான தீர்மானத் திற்கமைய இந்த பிரிவிடம் காணப் பட்ட மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவை பொதுமக்களின் சுகாதார தேவைகளுக்கென பயன்படுத்தப்படவுள்ளன. (05)

# தோல் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக தோல் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தோல் நோய் தொடர்பான விசேட வைத்தியர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

சருமத்தில் ஏதேனும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுவது அவசியமாகும். சருமத்தின் நிறத்தில் திடீரென மாற்றங்கள் ஏற்பட்டால் கிரீம் வகைளை பூசாமல் வைத்தியர் ஒருவரின் ஆலோசனையைப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

சருமத்திற்கு நன்மை அளிக்கும் பல்வேறு காய்கறிகள் மற்றும் பழங்கள் எமது நாட்டில் உள்ளன. எனவே அவற்றைத் தினமும் உண்ணுங்கள்.

திடீரென உடல் எடை அதிகரித்தால் வைத்தியரிடம் ஆலோசனை பெற்று ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுங்கள்.

தோலில் அரிப்பு, நிறம் மாற்றம், வெடிப்பு மற்றும் ஒவ்வாமை போன்ற நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் அலட்சியமாக இருக்காமல் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்.

பல்வேறு கிரீம் வகைகளைச் சருமத்தில் பயன்படுத்துவதனாலும் தோல் புற்றுநோய் ஏற்படலாம். எனவேவைத்தியரின்ஆலோசனை இன்றிசந்தையில்விற்பனைசெய்யப்படும்புதிய கிரீம் வகைகளைப் பயன்படுத்த வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## விட்டுக்கொடுக்காத. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கில் மக்கள் எந்தவகையில் ஒரு ஆணையை வழங்கி இருக்கிறார்களோ அதே அளவுக்கு அல்லது அதை விட பலமான ஆணையை தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு வழங்குவதன் மூலம் தெற்கில் பெறப்பட்ட ஆணையை வைத்து வடக்கில் உள்ள மக்களின் ஆணையை மிதித்து உதாசீனம் செய்ய முடியாத நெருக்கடி நிலையை ஏற்படுத்தலாம்.

மற்றவர்கள் ஏற்கனவே தேசிய மக்கள் சக்தி விரும்புகின்ற ஏக்கிய ராஜ்ய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு , தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வர முதலே இணங்கி விட்டார்கள். ஆகவே நாங்கள் மட்டும்தான் அந்த நிலைப்பாட்டில் இருந்து விலகி விட்டுக்கொடுக்காத முழுமையான சமஷ்டியை வலியுறுத்துகின்றோம்.

எங்கள் அணிக்கு அறுதிப் பெரும்பான்மை வழங்காமல் வேறு தரப்புக்கு அறுதிப் பெரும்பான்மையை வழங்கினால் நிலைமை மோசமாகும். அதேவேளை எமக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்து தென்னிலங்கை எமது நிலைப்பாட்டை ஏற்காதுவிட்டால் தம் தலைவிதியை தாமே தீர்மானிக்கும் அரசியல் நிலையை உருவாக்குவோம்.

தமிழ் மக்களின் நலன் மற்றும் உரிமைகள் தொடர்பாக நேர்மையாகப் பேசக்கூடிய தரப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே காணப்படும் நிலையில் சிங்கள தேசத்துக்கு சமாந்தரமாக தமிழ் தேசமும் அங்கீகரிக்கப்படும் வகையில் சமஷ்டி தொடர்பாகப் பேசுவோம். தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு பலமான ஆணை வழங்கியும் உதாசீனம் செய்யப்படுமாக இருந்தால் தமிழ் மக்களின் கருத்துக்களை ஜனநாயக முறையில் அறியும் சர்வஜன வாக்கெடுப்பை வலியுறுத்தும் நிலைக்கு தள்ளப்படுவோம் என்றார்.

## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரான சிவஞானம் சிறீதரனை ஆதரித்து, நேற்று வன்னேரிக்குளம் வட்டாரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் தமிழ் மக்களின் அரசியல் வெறுமையின் வடிகாலாக, தமிழ்த் தேசிய அடையாளமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி இருந்து வந்ததைப் போலவே, உட்கட்சி விரிசல்களை சீரமைத்து, எமது மக்களின் அரசியல் அடையாளமாக கட்சியை மீளக்கட்டியெழுப்பும் காலப் பணி எமக்கிருப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அத்தகைய பணிகளை நாம் ஆற்றுவதற்கு, எதிர்வரும் தேர்தலில் மக்கள் எமக்கு வழங்கப்போகும் ஆணையே உந்துசக்தியாக மாறும். இதனை உணர்ந்த எமது மக்களின் தெரிவுகள் அரசியல் அறம் சார்ந்தும், தமிழ்த் தேசியக் கொள்கை சார்ந்துமே அமையும் என்றார்.

## சந்தேகநபராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிடுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எபிக் லங்கா பிரைவேட் லிமிடெட் இனால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மொஹமட் லாபிர் தாஹிர் மற்றும் பி.குமரன் இரத்னம் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி, இந்த வழக்கின் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிடுவதற்கு அனுமதி வழங்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

சட்டத்தரணியின் கோரிக்கையை ஆராய்ந்த நீதிபதிகள் குழாம் இந்த வழக்கின் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

## வட்ஸ்அப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கப்பட்டு, தொடர்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு நிதி அல்லது உதவிகள் கோரி, குறுந்தகவல்கள் அனுப்பப்படுவதாகக் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் போலி இணையப் பக்கங்கள், சமூக வலைத்தள கணக்குகள் மற்றும் குறுந்தகவல்கள் என்பவற்றின் ஊடாக வெள;வேறு வங்கிகள், அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றின் போர்வையில் இவ்வாறு நிதி மோசடி இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஓ.டி.பி. என்ற ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தும் கடவு எண் மற்றும் இலத்திரனியல் வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்கான கடவுச்சொல் என்பவற்றைப் பகிர்வதைத் தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு இணைய நிதிக் குற்றங்களால் பாதிக்கப்பட்டிருந்தால், மக்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கீழ் உள்ள கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் னசை.உஉனைளூரிழடஷ்உந.பழஎ.டம என்ற மின்னஞ்சல் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொய்குற்றச்சாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஷாபி தெரிவித்ததாவது:

அரசியல் பிரசாரத்திற்காக தம்மீது சுமத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளினால்தான் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க தமக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்த அனைவருக்கும் எதிராக இந்த முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளளேன்.

என் மீது எந்த முறைப்பாடும் இல்லாமல் நான் கைதுசெய்யப்பட்டேன். எனது தொழிலை சீரழிக்கும் வகையில் இலங்கை மருத்துவ சபையில் எனக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது.

எனது சொத்துக்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் மற்றுமொரு முறைப்பாடு செய்யப்பட்டது. சமூகத்தை எதிர்கொள்ள முடியாத நிலைக்கு நானும் எனது குடும்பத்தினரும் கொண்டுவரப்பட்டோம்.

ஐந்தாண்டு விசாரணையின் போது நானும் கனது மனைவியும் பல முறைப்பாடுகளை தாக்கல் செய்திருந்தோம், ஆனால் எதுவுமே நிவர்த்தி செய்யப்படவில்லை. எனக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காகவே இன்று முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டது என்றார்.

மருத்துவர் ஷாபி மீது 2019ஆம் ஆண்டு சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் குருநாகல் நீதிவான் நீதிமன்றம் அவரை அண்மையில் விடுவித்தது. போதிய ஆதாரங்கள் இன்மையால் அவர் விடுதலை செய்யப்பட்டார். முறைப்பாடு செய்தவர்கள் தமது குற்றச்சாட்டுகளை நிரூபிக்கத் தவறியதால் வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் தற்போது இந்த முறைப்பாட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

2019 ஆம் ஆண்டில், குருநாகல் போதனா வைத்தியசாலையில் சட்டவிரோத கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தார் என குற்றம் சுமத்தப்பட்டு மருத்துவர் ஷாபி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

## சுமந்திரனிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட வெளிவந்துள்ளது' என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தார், என்றும் அதன் ஊடாக தனது பெயருக்கும், தனது மகனின் பெயருக்கும் களங்கம் விளைவித்துள்ளதாக தனது சட்டத்தரணி ஊடாக சுமந்திரனிடம் 50கோடி ரூபா இழப்பீடு கேட்டு சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பியுள்ளார்

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் நடத்த பிரசார கூட்டம் ஒன்றில் சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்த கருத்து தொடர்பிலும் இழப்பீட்டு தொகை கேட்டு , தனது சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பவுள்ளதாகவும் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற போர்வையில்; கடந்த 2016 ஆம் ஆண்டு மார்சிலிருந்து - 2017 செப்ரெம்பர் 21 வரையான காலப்பகுதியில் 'ஏக்கிய இராச்சிய' அடிப்படையிலான' (ஒற்றையாட்சி) அரசியல் அமைப்புக்கான இடைக்கால வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கை தாயகமென அங்கீகரிக்காத, வடக்கு கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தாத, தமிழ்த் தேசம், அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிக்காத, சமஷ்டி ஆட்சி முறையை மறுதலிக்கும், பௌத்தத்தை முதன்மை மதமாக அங்கீகரிக்கின்ற 'இறைமை பகிரப்பட முடியாத ' மற்றும் இறைமையைப் பராதீனப்படுத்த முடியாத ஏக்கிய இராச்சிய (ஒற்றையாட்சி) அடிப்படையிலான அரசமைப்புக்கான வரைபாகவே அவ் இடைக்கால வரைபு வெளிவந்துள்ளது.

இந்த ஏக்கிய இராச்சிய (ஒற்றையாட்சி) அரச கட்டமைப்புக்கான இடைக்கால வரைபைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) முற்று முழுதாக நிராகரிக்கிறது. அதேபோன்று 13ஆம் திருத்தச் சட்டமோ, அதன் கீழான மாகாண சபைகளோ தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகவேனும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.

2017 செப்ரெம்பர் 21இல் வெளியிடப்பட்ட புதிய ஏக்கிய இராச்சிய (ஒற்றையாட்சி) அரசமைப்பிற்கான இடைக்கால வரைபை முற்றாக நிராகரித்து, தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தின் பிரகாரம், இணைந்த வடக்கு - கிழக்கினை தாயகமாகக் கொண்டு தமிழ் மக்களை, தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக அங்கீகரித்து அதன் தனித்துவமான இறைமையையும், சர்வதேச சட்டங்களின் அடிப்படையில், தமிழ் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையின் பிரகாரம், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தொடர்ந்து போராடுவோம்.

இந்த இறையமையுள்ள தேசங்களின் கூட்டிணைவு என்பது 'கனடா' போன்று உலகின் முன்னேறியுள்ள பல நாடுகளில் உள்ளவை போன்ற அதிகார அமைப்பாகும். இங்கு மலையக தமிழர்கள் மற்றும் முஸ்லீம்கள் தாம் சுயநிர்ணய உரிமையை கோர உரித்துடையவர்கள் என்ற கோரிக்கைகளை முன்வைப்பின், நாம் அதனை ஏற்றுக்கொள்வோம். ஆனால், சுயநிர்ணய உரிமை அரசியலை முன்னெடுப்பதா இல்லையா என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக அவர்களுடன் கைகோர்த்து ஒன்றாகப் பயணிப்பதற்கு நாம் என்றும் தயாராகவே உள்ளோம்.

இலங்கைத் தீவானது பௌத்த சிங்கள மக்களுக்காக மாத்திரமே சிருஸ்டிக்கப்பட்டது எனும் மகாவம்ச மனநிலை காரணமாகவே இத் தீவில் தமிழ் தேசத்தின் இருப்பை சிதைப்பதற்காக இன்று வரை தொடரும் இன அழிப்பு செயற்திட்டத்தை சிங்கள தேசம் முன்னெடுத்து வருகிறது. ஆகவே தமிழரின் (ஆயுதம் தரித்த மற்றும் ஜனநாயக வழி தழுவிய) போராட்டம், எமது தேசம் என்ற பரிமாணத்தை பாதுகாத்தல் பற்றியதாகும். அந்த பரிமாணம் நாமே எம்மை ஆளும் சுயநிர்ணய உரிமையை பெறும்போதே பாதுகாக்கப்படும்.

இலங்கைத் தீவானது பௌத்த சிங்கள மக்களுக்காக மாத்திரமே சிருஸ்டிக்கப்பட்டது எனும் மகாவம்ச மனநிலை காரணமாகவே இத் தீவில் தமிழ் தேசத்தின் இருப்பை சிதைப்பதற்காக இன்று வரை தொடரும் இன அழிப்பு செயற்திட்டத்தை சிங்கள தேசம் முன்னெடுத்து வருகிறது. ஆகவே தமிழரின் (ஆயுதம் தரித்த மற்றும் ஜனநாயக வழி தழுவிய) போராட்டம், எமது தேசம் என்ற பரிமாணத்தை பாதுகாத்தல் பற்றியதாகும். அந்த பரிமாணம் நாமே எம்மை ஆளும் சுயநிர்ணய உரிமையை பெறும்போதே பாதுகாக்கப்படும்.

இலங்கைத் தீவானது பௌத்த சிங்கள மக்களுக்காக மாத்திரமே சிருஸ்டிக்கப்பட்டது எனும் மகாவம்ச மனநிலை காரணமாகவே இத் தீவில் தமிழ் தேசத்தின் இருப்பை சிதைப்பதற்காக இன்று வரை தொடரும் இன அழிப்பு செயற்திட்டத்தை சிங்கள தேசம் முன்னெடுத்து வருகிறது. ஆகவே தமிழரின் (ஆயுதம் தரித்த மற்றும் ஜனநாயக வழி தழுவிய) போராட்டம், எமது தேசம் என்ற பரிமாணத்தை பாதுகாத்தல் பற்றியதாகும். அந்த பரிமாணம் நாமே எம்மை ஆளும் சுயநிர்ணய உரிமையை பெறும்போதே பாதுகாக்கப்படும்.

இலங்கைத் தீவானது பௌத்த சிங்கள மக்களுக்காக மாத்திரமே சிருஸ்டிக்கப்பட்டது எனும் மகாவம்ச மனநிலை காரணமாகவே இத் தீவில் தமிழ் தேசத்தின் இருப்பை சிதைப்பதற்காக இன்று வரை தொடரும் இன அழிப்பு செயற்திட்டத்தை சிங்கள தேசம் முன்னெடுத்து வருகிறது. ஆகவே தமிழரின் (ஆயுதம் தரித்த மற்றும் ஜனநாயக வழி தழுவிய) போராட்டம், எமது தேசம் என்ற பரிமாணத்தை பாதுகாத்தல் பற்றியதாகும். அந்த பரிமாணம் நாமே எம்மை ஆளும் சுயநிர்ணய உரிமையை பெறும்போதே பாதுகாக்கப்படும்.

- பாராளுமன்றத் தேர்தல் - தேர்தல் விஞ்ஞாபனம்10சிறீலங்காவின் அரசியல் அமைப்பில், அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றானதனிமனிதனுடைய பேச்சுச் சுதந்திரத்தினை கட்டுப்படுத்துகின்ற வகையில் இணைக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டின் 6 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படல்வேண்டும்.த

இலங்கை அரசியல் அமைப்பில், அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றானதனிமனிதனுடைய பேச்சுச் சுதந்திரத்தினை கட்டுப்படுத்துகின்ற வகையில் இணைக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டின் 6 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படல்வேண்டும்.த

எமது மக்களின் தாயகம், தனித்துவமான இறைமை கொண்ட தேசம் மற்றும் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை, என்ற அடிப்படைகள் சமரசத்திற்கு அப்பாற்பட்டவை. எமது மக்களின் நலன்களுக்கு மேற்குறித்த கோட்பாடுகள் அங்கீகரிக்கப்படுவது அடைப்படையானது. நாம் எந்த நாட்டினதும், தேசத்தினதும், இனத்தினதும், இனக்குழுக்களினதும் நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர். மாறாக, எமது தேசத்தின் நலன்கள் பேணப்படும் வகையில் சிங்கள தேசத்துடனும், இந்தியா, மேற்குலகு உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடனும் ஆரோக்கியமான இராஜதந்திர உறவுகளைக் கட்டியெழுப்ப விரும்புகின்றோம். மேற் கூறப்பட்ட தீர்மானங்களைப் பூரணமாகச் செயல்வடிவில் சாதிக்கும் நோக்குடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் உறுதியுடன் பணியாற்ற திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போராடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம், எதிர்வரும் 2024 நவம்பர்; 14ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில்' போட்டியிடுகின்றோம். இத்தேர்தலில் எமக்கு அமோக ஆதரவை வழங்குமாறு தமிழ் மக்களை நாம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட

தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com


பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
தமிழர் இருப்பு
பொருளாதார அபிவிருத்தி
கௌரி காப்பு
1. ஐம்பதுவீத பெண்கள் பங்களிப்பு
2. வெளிப்படைத்தன்மை
3. மனநல பாதுகாப்பு
4. காணியுரிமை
5. விவசாய மறுமலர்ச்சி
6. போதைவஸ்து ஒழிப்பு
7. கல்வி மேம்பாடு
8. இளம் தொழின் முயற்சியாளருக்கான உதவித்தொகை வழங்குதல்
9. மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்
10. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு
11. திரைப்படத்துறை மீள் உருவாக்கம்
12. பதனிடப்பட்ட உணவு வகைகள் உற்பத்தி ஏற்றுமதியை அதிகரித்தல்
13. சூழல் பாதுகாப்பு மீள் சுழற்சி திட்டம்
14. பெண்கள், சிறுவர், முதியோர் பாதுகாப்பு திட்டங்கள்
15. தகவல் தொழிநுட்ப பூங்கா உருவாக்கம்
16. சுற்றுலாத்துறை அபிவிருத்தி
17. சமூகவலைத்தள பாதுகாப்பு
18. கூட்டுறவுச்சங்கங்களின் வகிபாகத்தை பலப்படுத்தல்
19. மீனவர்களின் நிரந்தர வாழ்வாதார உரிமத்தைப் பாதுகாத்தல்
20. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SGDs) அடைதலுக்கான உறுதிப்பாடு
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
X
4
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9

காலைக்கதிர் Kalaikkathir




# பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு



இலங்கைக்கான பங்களாதேஷ் மக்கள்குடியரசின்உயர்ஸ்தானிகர் அண்டலிப் எலியாஸ், கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர பாதுகாப்பு தலைமையகவளாகத்தில்பாதுகாப்பு அமைச்சின்செயலாளர்எயார்வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தாவை (ஓய்வு) புதன்கிழமை சந்தித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் பங்களாதேஷ் தூதுவரை அன்புடன் வரவேற்று சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார். இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பைமேம்படுத்தல்குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தச்சந்திப்பைநினைவுகூறும் வகையில்நினைவுச்சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின்பாதுகாப்பு ஆலோசகர்கொமடோர்ஷபியுல்பாரி ஆகியோரும் கலந்துகொண்டனர். (05)

# சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டுள்ள பூச்சிக்கொல்லி மருந்துடன் இருவர் கைது

திவுலப்பிட்டிய, பல்லபான பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

திவுலப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து அனுமதியின்றி சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 700 பூச்சிக்கொல்லி மருந்து பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் பலாங்கொடை மற்றும் பல்லேபெத்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# வரவு – செலவு திட்டம் தாமதமாகும் வரைக்கும் நாணய நிதிய கடன் தவணையும் தாமதமாகும்

## சுசில் பிரேமஜயந்த எச்சரிக்கை

அடுத்த வருடத்துக்காக வரவு செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தாமதமாகும் அளவுக்கு அரசாங்கத்தின் வருமானத்தை தேடிக்கொள்வதற்கான யோசனைகளை முன்வைக்க முடியாமல் போவதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தவணையும் பிற்படுத்தப்படும் என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியே அதிகாரத்துக்கு வந்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் யோசனைகளை வரவு செலவு திட்டத்தின் ஊடாகவே முன்வைக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தை இந்த வருடம் சமர்ப்பிப்பதில்லை எனத் தெரிவித்திருக்கிறது. அதற்கு பதிலாக இடைக்கால கணக்கு வாக்கெடுப்பொன்றை நிறைவேற்றிக்கொள்ளவதாகத் தெரிவித்திருக்கிறது.

இடைக்கால கணக்கு வாக்கெடுப்பு மூலம் அரசாங்கத்தின் அன்றாட செலவுகளுக்கு மாத்திரமே பணம் செலவிட முடியும். அபிவிருத்தி திட்டங்களுக்கோ நிவாரணங்களை வழங்கவோ முடியாது.

அதேநேரம் அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தமதமாகும்போதும் அதுதொடர்பில் ஊடகங்கள் வெளிப்படுத்தும்போது ஊடகங்களை அச்சுறுத்தும் நடவடிக்கையையே அரசாங்கம் கையாண்டு வருகிறது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றுவது என அரசாங்கம் மக்களுக்கு தெரிவிப்பதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும். அவ்வாறு இல்லாமல் ஊடகங்களை அச்சுறுத்துவதில் எதுவும் இடம்பெறப்போவதில்லை.

மேலும் அரசாங்கத்துக்கு உலக வங்கி 200 டொலர் மில்லியன் வழங்கி இருப்பதாக அரசாங்கம் பெருமையாக தெரிவித்து வருகிறது. ஆனால் அது நன்கொடையாக வழங்கப்படவில்லை.

கடனாகவே வழங்கப்பட்டிருக்கிறது. எமது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய பொருளாதார அபிவித்தி இலக்குகளை அடைந்துவருவதை அடிப்படையாகக்கொண்டு எமக்கு கடன் வழங்குகிறது.

தற்போதும் உலக வங்கி கடன் வழங்கி இருப்பது எமது வேலைத்திட்டத்தின் அடிப்படையிலாகும். ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட கடன் உதவி தற்போது பிற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஏனெனில்வரவுசெலவுதிட்டஅறிக்கைசமர்ப்பிப்பதுபிற்படுத்தப்படும்போதுகடன் தவணையும் பிற்படுத்தப்படுகிறது. வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலேயே எமது வருமான இலக்குகளும் அதனை அடைந்துகொள்வதற்கான சோசனைகளும் முன்வைக்கப்படுகிறது.

எமதுவருமானவழிகளைபார்த்தேஎமக்குஅடுத்த கட்ட கடன் தவணை கிடைக்கிறது. அதேபோன்று வரவு செலவு திட்டம் பிற்படுத்தப்படுவதன் மூலம் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, மக்கள் எதிர்பார்த்திருக்கும் நிவாரணங்கள் வரி குறைப்புகள் என அனைத்தும் நிச்சயமற்ற நிலைக்கு தள்ளப்படும்;.
- என்றார்.

(05)

# தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்குவது ஆபத்தானது

## அதன் ஸ்தாபக தலைவர் மகன் உவிந்து எச்சரிக்கை



தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவது ஆபத்தான விடயம் என ஜேவிபியின் ஸ்தாபக தலைவர் ரோகணவிஜயவீரவின் மகன் உவிந்து விஜயவீர எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஜேவிபிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவது அரசியல் ரீதியில் பேரழிவாக அமையும் என இரண்டாவது தலைமுறை கட்சியின் பொதுச்செயலாளரான உவிந்து விஜயவீர தெரிவித்துள்ளார்.

ஜேவிபிக்கு மூன்றில் இரண்டு கிடைத்தால் உருவாகக்கூடிய விளைவுகள் குறித்து வாக்காளர்கள் எச்சரிக்கையுடன்இருக்கவேண்டும்என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1977 பொதுத்தேர்தலில் மிகப்பெரும் பெரும்பான்மையை பெற்ற பின்னர் ஜே.ஆர் ஜெயவர்த்தன முன்னெடுத்த அரசியல் தந்திரோபாயங்கள் குறித்து நினைவுபடுத்தியுள்ள ரோஹண விஜயவீரவின்மகன்,அவ்வாறானதொரு நிலைமையை நாடு தாங்காது எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தை சுத்தம் செய்வதற்காக ஊழல் அரசியல்வாதிகளை தோற்கடிக்கவேண்டும் என்ற தேசிய மக்கள் சக்தியின் பிரகடனம் பிழையானது என நான் கருதவில்லை. ஆனால் புதிய பழைய கட்சிகளில் இருந்து புதியவர்கள் பலர் போட்டியிடும் இந்த தருணத்தில் வாக்காளர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை மாத்திரம் தெரிவுசெய்யவேண்டும் என அழுத்தம் கொடுப்பது சரியானதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக தேர்தலில் போட்டியிடும் அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்குவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியமக்கள்சக்தியின்பரப்புரைக்குவாக்காளர்கள் பலியாகவேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.11.2024இல் வெளியிடப்பெற்றது